# TNPSC GROUP II TEST BATCH 2024

## மாதிரித்தேர்வு - II

## பொது அறிவு மற்றும் பொதுத்தமிழ்

**குறிப்பு**: **மாணவர்கள் தங்களது பெயர், கைப்பேசி எண் மற்றும் பதிவு எண்ணை விடைத்தாளில் (OMR) குறிப்பிடுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்**

**நேரம்: 3 மணி** **மொத்த மதிப்பெண்கள்: 300**

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்
2. இந்த வினாத்தொகுப்பு 200 வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினாத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத்தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
3. **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும், எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.**
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப்பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுறைப் பேனாவினால்** குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக்காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. **ஒவ்வொரு வினாவும் (A) (B) (C) (D) (E) என ஐந்து பதில்களைக் கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும்.** ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தாள் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத்தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
9. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.** இதைத்தவிர வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. **இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. **ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகள்தான் முடிவானதாகும்**.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

1. “மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லைத் தமிழரைத தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை” – என முழங்கியவர் யார்?

a. கலைஞர் b. காமராஜர் c. அண்ணா
d. பெரியார் e. விடை தெரியவில்லை

2. தமிழ்நாட்டில் பெண்களுக்காக நடத்தப்பட்ட முதல் இதழ்

a. அமிர்த வசனி b. மஞ்சரி c. கலைக்கதிர்
d. விஜயா e. விடை தெரியவில்லை

3. கீழ்க்கண்ட கூற்றை கொண்டு சரியான நபரை தேர்வு செய்க

I. தமிழ்நாடு தொல்பொருள் துறையின் முதல் இயக்குநர்
II. இவரின் புகழ்பெற்ற நூல் தென்னகச் செப்புத் திருமேனிகள்
III. மாமல்லபுரச் சிற்பங்கள் மகேந்திரவர்மன் செதுக்கியதன்று, அவற்றைச் செதுக்கியவன் ராஜசிம்மபல்லவன் என்று நிறுவியவர்

a. ஐராவதம் மகாதேவன் b. இரா. நாகசாமி
c. குடந்தை என் சேதுராமன் d. புலவர் செ. இராசு
e. விடை தெரியவில்லை

4. அறிவியல் தமிழின் முன்னோடி…
அறிவியல் தமிழின் தந்தை… என அழைக்கப்படுபவர் யார்?

a. ஆர்.கே. விசுவநாதன் b. சிவன் c. அப்துல் கலாம்
d. பெ.நா. அப்புஸ்வாமி e. விடை தெரியவில்லை

5. “நான் கண்ட அண்ணா” எனும் நூலை எழுதியவர் யார்?

a. M.S. வேங்கடாசலம் b. பெரியார் c. கலைஞர்
d. நாவலர் நெடுஞ்செழியன் e. விடை தெரியவில்லை

6. தவறானதை தேர்வு செய்க

a. 1856 – சமரச வேத சன்மார்க்க சங்கம்
b. 1865 – சமரச சுத்த சன்மார்க்க சங்கம்
c. 1867 – சத்திய தருமசாலை
d. 1872 – சத்திய தருமசாலை
e. விடை தெரியவில்லை

7. குறுநில மன்னர்கள், கபிலரின் துயரமான முடிவு மற்றும் களப்பிரர்கள் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு ________

a. கடுகுமலை கல்வெட்டு b. திருப்பரங்குன்றம் கல்வெட்டு
c. திருக்கோவிலூர் கல்வெட்டு d. கேந்தூர் கல்வெட்டு
e. விடை தெரியவில்லை

8. பொருத்துக

| இலக்கண நூல் | ஆசிரியர் |
|---|---|
| A. நேமிநாதம் | 1. குணவீர பண்டிதர் |
| B. இலக்கண விளக்கம் | 2. வைத்தியநாத தேசிகர் |
| C. அறுவகை இலக்கணம் | 3. தண்டபாணி சுவாமிகள் |
| D. பிரலோக விவேகம் | 4. சுப்ரமணிய தீட்சிதர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 3 | 4 | 2 |
| b. | 1 | 2 | 4 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 1 | 4 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

9. கல்யாண்ஜி (எஸ். கல்யாண சுந்தரம்) கவிதை நூல்களில் தவறானது எது?
a. புலரி b. முன்பின் c. மணல் உள்ள ஆறு
d. மலையருவி e. விடை தெரியவில்லை

10. "தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே"
எனும் கூற்று இடம்பெற்றுள்ள நூல் எது?
a. பொருநராற்றுப்படை b. நெடுநல்வாடை c. சிறுபாணாற்றுப்படை
d. புறநானூறு e. விடை தெரியவில்லை

11. பொருந்தாதைச் சுட்டுக.
a. சோழர் சரித்திரம் b. திருநெல்வேலி சரித்திரம்
c. வேளிர் வரலாறு d. கள்ளர் சரித்திரம்
e. விடை தெரியவில்லை

12. தவறானதை தேர்க.

| இலக்கணம் | சிற்றிலக்கிய வகை |
|---|---|
| I. குழவி மருங்கினும் கிளவதாகும் | - பிள்ளைத்தமிழ் |
| II. காமம் மிக்க கழிபடர் கிளவி | - வாயில் (அ) சந்து |
| III. கட்டினும் கழங்கினும் | - பள்ளு |
| IV. ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப | - குறவஞ்சி |

a. I மற்றும் III b. II மற்றும் III c. III மற்றும் IV
d. I மற்றும் IV e. விடை தெரியவில்லை

13. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நகரத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம் -
அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல்லைக் கண்டறிக.
a. துன்பம், துன்பம் b. துன்பம், எமன் c. இன்பம், எமன்
d. இன்பம், இன்பம் e. விடை தெரியவில்லை

14. சங்க காலத்தில் இந்திரவிழாவாக கொண்டாடப்பட்ட பண்டிகை
a. தீபாவளி b. கார்த்திகைத் திருநாள் c. பொங்கல்
d. போகிப் பண்டிகை e. விடை தெரியவில்லை

15. பின்வரும் கூற்றுகளில் சரியானதைத் தேர்க.
I. கரிகாலனின் முன்னோர் காற்றின் போக்கை அறிந்து கலம் செலுத்தினர் என்பதை புறநானூற்றுப் பாடல் கூறுகின்றது.
II. மதுரைக்காஞ்சியும், சிறுபாணாற்றுப்படையும் கொற்கை முத்தைச் சிறப்பிக்கின்றன. "விளைந்து முதிர்ந்த விழுமுத்து" என மதுரைக் காஞ்சி கூறுகிறது.
III. ஆர்கலி, ஆழி, வாரணம், புணை, தெப்பம் முதலியன கடலைக் குறிக்கும் வேறு பெயர்கள்
IV. கொற்கைத் துறைமுகத்தில் முத்துக்குளித்தல் மிகச் சிறப்பாக நடந்ததை வெனிசு நாட்டறிஞர் மார்க்கோ போலோ குறித்துள்ளார்.

a. I, II, III சரி b. I, II சரி c. I, III, IV சரி
d. I, II, IV சரி e. விடை தெரியவில்லை

16. கேளிக்கை நாடகம் என்ற வகையையும், நாடக நையாண்டியையும் தமிழ் நாடக உலகுக்கு அறிமுகப்படுத்தி ஆக்கம் சேர்த்தவர்.
a. கந்தசாமி b. பம்மல் சம்பந்தனார் c. பரிதிமாற் கலைஞர்
d. சங்கரதாசு சுவாமிகள் e. விடை தெரியவில்லை

17. பொழிப்பு முரண் இடம்பெற்றுள்ள தொடர் எது?
a. எங்கும் புதுமை அங்கும் இங்கும்
b. முற்பகல் செய்யின் விளையும் பிற்பகல்
c. உயர்ந்த நெஞ்சங்கள் தாழ்ந்த உள்ளங்கள்
d. அவியினும் வாழினும் என் செய்வேன்
e. விடை தெரியவில்லை

18. தவறான மரச்சொல்லை கண்டறிக.
a. மாம்பிஞ்சு b. வாழைக்கச்சல் c. பலாமூசு
d. முருங்கைச் சரடு e. விடை தெரியவில்லை

19. தவறான இணை எது?
a. குறிஞ்சி – அகில், வேங்கை b. முல்லை – புன்னை, ஞாழல்
c. மருதம் - காஞ்சி d. பாலை - இலுப்பை
e. விடை தெரியவில்லை

20. தவறான இணை எது?
a. ஒன்றிய வஞ்சித்தளை - செந்தாமரைக் குளத்தினிலே
b. நிரையொன்றாசிரியத்தளை - பலர்புகழ் கபிலர்
c. வெண்சீர் வெண்டளை - வானில்வளர் திங்களன்ன
d. இயற்சீர் வெண்டளை - நிலவரை நீள்புகழ்
e. விடை தெரியவில்லை

21. மணநூலுக்கு உரைகண்ட புலவர்
a. சி.வை. தாமோதரனார் b. ந.மு. வேங்கடசாமி நாட்டார் c. அடியார்க்கு நல்லார்
d. நச்சினார்க்கினியர் e. விடை தெரியவில்லை

22. விடைக்கேற்ற வினாவைக் கண்டறிக.
"அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காய்"
a. அறந்தலைப் பட்ட நெல்லியம் பசுங்காயா?
b. நெல்லியம் பசுங்காய் தானா?
c. அறந்தலைப் பட்ட நெல்லியம் என்றால் என்ன?
d. பசுங்காய் எது?
e. விடை தெரியவில்லை

23. "நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று தன் செய்வினைப் பயனே" - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூலினைத் தொகுப்பித்தவர்
a. மிளைக்கிழான் நல்வேட்டனார் b. புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்
c. பன்னாடு தந்த மாறன் வழுதி d. பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
e. விடை தெரியவில்லை

24. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.
"புத்தக சாலை" யை குறிக்காத பெயர்கள் எவை?
I. ஏடகம் II. கந்துகம் III. உரகம் IV. சுவடியகம்
a. I மற்றும் III b. II மற்றும் III c. II மற்றும் IV
d. I, II மற்றும் III e. விடை தெரியவில்லை

25. "களிறு எறிந்து பெயர்தல் காளைக்கு கடனே"
என்ற பாடலைப் பாடிய புலவர்
a. பொன் முடியார் b. மோசிகீரனார் c. ஒக்கூர் மாசாத்தியார்
d. ஔவையார் e. விடை தெரியவில்லை

26. ந. பிச்சமூர்த்தி புதுக்கவிதையை குறிப்பிட பயன்படுத்தாத பெயர் எது?
a. கட்டுக்குள் அடங்காக் கவிதை b. விலங்குகள் இல்லாக் கவிதை
c. கட்டற்ற கவிதை d. ஏட்டில் எழுதா கவிதை
e. விடை தெரியவில்லை

27. அகநானூற்றில் உள்ள நானூறு பாடல்களையும் பாடிய புலவர்களின் எண்ணிக்கை
a. 145 b. 160 c. 275 d. 13 e. விடை தெரியவில்லை

28. H.A. கிருட்டிணப் பிள்ளையின் ஆசிரியர் அல்லதவர் யார்?
a. பிலவணச் சோதிடர் b. சபாபதி
c. சங்கர நாராயணர் d. மாணிக்கவாசகத் தேவர்
e. விடை தெரியவில்லை

29. முத்தொள்ளாயிரத்தின் 108 பாடல்கள் எந்நூலின் வாயிலாக கிடைத்தன?
a. பழைய உரைநூல் b. புறத்திரட்டு
c. புறப்பொருள் வெண்பாமாலை d. தனிப்பாடல் திரட்டு
e. விடை தெரியவில்லை

30. பொருத்துக:
A. ம 1. உயர்வு
B. பே 2. பூமி
C. கூ 3. மேகம்
D. சே 4. சந்திரன்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

31. பொருந்தாத இணை யாது?
a. Pilot - வலவன்
b. Antibiotics – எதிர் உயிரிப்பொருள்
c. Consumer - வாடிக்கையாளர்
d. Molecule - மூலக்கூறு
e. விடை தெரியவில்லை

32. வள்ளலார் ''ஞானப்பச்சிலை'' என்று அழைத்த மூலிகை?
a. வல்லாரை b. தூதுவளை c. கற்றாழை
d. கரிசலாங்கண்ணி e. விடை தெரியவில்லை

33. குலசேகராழ்வார் பிறந்த ஊர்
a. ஆழ்வார் திருநகரி b. திருவாமூர் c. திருவஞ்சைக்களம்
d. திருவரங்கம் e. விடை தெரியவில்லை

34. செய்யுளை மங்கலம் கூறி நிறைவு செய்வதை இவ்வாறு அழைப்பர்
a. திருக்காப்பு கடை b. கடைநிலை மங்கலம்
c. திருக்கடைக் காப்பு d. மங்கல வாழ்த்துப் பாடல்
e. விடை தெரியவில்லை

35. ''இரவீந்திரநாத் தாகூர் கீதாஞ்சலியை இயற்றினார்'' - இது எவ்வகை வாக்கியம் எனக் கண்டறிக.
a. தன்வினை வாக்கியம் b. பிறவினை வாக்கியம் c. தொடர் வாக்கியம்
d. செய்வினை வாக்கியம் e. விடை தெரியவில்லை

36. பரிதிமாற்கலைஞர் இயற்றாத நூல் எது?
a. தமிழ் புலவர் சரித்திரம் b. மான விஜயம் c. நாடகத் தமிழ்
d. சித்திர கவி e. விடை தெரியவில்லை

37. சரியான தொடர்:
a. இன்று பேருந்துகள் ஓடாது b. நான் வாங்கிய நூல் இது அன்று
c. இது பொது வழி அல்ல d. இவை பொது வழி அன்று
e. விடை தெரியவில்லை

38. அ∴கசாலை என்பது
a. அங்காடிகள் அமைந்துள்ள இடம் b. யவனர்கள் இருக்கின்ற இடம்
c. நாணயங்கள் அச்சடிக்கும் இடம் d. அரேபியர்கள் பந்தர் இடம்
e. விடை தெரியவில்லை

39. பொருத்துக:
A. மதுரைக்கலம்பகம் 1. இரட்டையர்கள்
B. கச்சிக்கலம்பகம் 2. குமரகுருபரர்
C. திருவரங்கக் கலம்பகம் 3. பூண்டி அரங்க நாத முதலியார்
D. தில்லைக் கலம்பகம் 4. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 4 | 3 |
| b. | 2 | 3 | 2 | 4 |
| c. | 2 | 3 | 4 | 1 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

40. யானையைக் குறிக்கும் வேறு சொல்
a. குஞ்சரம் b. குஞ்சனம் c. அஞ்சுகம்
d. காரி e. விடை தெரியவில்லை

41. “போர்க்குறிக் காயமே புகழின் காயம்” என்பது
a. கலிங்கத்துப்பரணி b. புறநானூறு c. மனோன்மணியம்
d. களவழி நாற்பது e. விடை தெரியவில்லை

42. Involvement” என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல் தேர்ந்தெடுக்க.
a. தொடர்பு b. விடுபடுதல் c. ஈடுபாடு
d. பாடுபடுதல் e. விடை தெரியவில்லை

43. ‘கொட்க’ என்னும் சொல்லின் வேர்ச்சொல்
a. கொட்டு b. கொள் c. கொண்டு
d. கொட்கு e. விடை தெரியவில்லை

44. ஆராய்ச்சிப் பேரறிஞர் என்னும் அடைமொழி யாருக்குரியது?
a. வையாபுரிப் பிள்ளை b. சதாசிவப்பண்டாரத்தார்
c. பண்டிதமணி கதிரேசனர் d. மு. வரதராசன்
e. விடை தெரியவில்லை

45. சிப்பி, சங்கு, நத்தை எத்தனை அறிவுயிர்கள்
a. இரண்டு b. மூன்று c. நான்கு
d. ஐந்து e. விடை தெரியவில்லை

46. கவிஞன் ஒரு பொருளைச் சிறப்பிக்கக் கருதுவதற்காக உலகமறிந்து வலியுடைய பிறிதொரு பொருளை எடுத்துக்காட்டிக் கூறுவது
a. வேற்றுமையணி b. பிறிது மொழிதல் அணி
c. வேற்றுப்பொருள் வைப்பணி d. ஒட்டணி
e. விடை தெரியவில்லை

47. தொடை விகற்பம் எத்தனை வகைப்படும்
a. 35 b. 40 c. 43 d. 56 e. விடை தெரியவில்லை

48. அபிதான சிந்தாமணியை இயற்றியவர்
a. வீரமாமுனிவர் b. சிங்காரவேலு முதலியார்
c. கண்ணப்ப முதலியார் d. ஜி.யு. போப்
e. விடை தெரியவில்லை

49. உதயண குமார காவியம் எக்காப்பியத்தின் சுருக்கம்?
a. பெருங்கதை b. விஷ்ணுபுராணம் c. மகாபாரதம்
d. நளவெண்பா e. விடை தெரியவில்லை

50. விருத்தப்பாவைக் கையாள்வதில் இவர் சீவகவிந்தாமணியின் ஆசிரியரையும் விஞ்சிவிட்டார் என யாரைப் பற்றி டாக்டர் மு.வ. குறிப்பிடுகின்றார்.
a. கம்பர் b. திருமூலர் c. தோலாமொழித்தேவர்
d. சேக்கிழார் e. விடை தெரியவில்லை

51. ஆசிரியப்பாவின் அடிவரையறை
a. 2 - 12 b. 3 - 100 c. 4 - 100
d. 3 – 12 e. விடை தெரியவில்லை

52. வங்க அரசு, தமிழ் – வங்க மொழிகளுக்கு அவர் ஆற்றிய தொண்டைப் பாராட்டி "நேதாஜி இலக்கிய விருது" அளித்துச் சிறப்பித்தது

a. த.நா. குமார சுவாமி b. ஏ.ஆர். இரஹ்மான்

c. சொ. விருதாச்சலம் d. மயிலை சீனி. வேங்கடசாமி

e. விடை தெரியவில்லை

53. "தொல்காப்பியரின்" இயற் பெயர்

a. ஜமதக்கினி மஹாரிஷி b. கவிராஜ மஹாரிஷி

c. தீரண துமாக்கினி d. கலிநாடன்

e. விடை தெரியவில்லை

54. தமிழ் மொழியின் மறந்ததும் மறைந்ததுமான சிறந்த செய்திகளை வெளிக்கொணர்ந்து வீரிய உணர்வுடன் வெளியிட்டவர்

a. அறிஞர் அண்ணா b. திரு.வி.க.

c. அயோத்திதாசர் d. மயிலை. சீனி வேங்கடசாமி

e. விடை தெரியவில்லை

55. ஹைக்கூ என்பதன் தமிழ்ச்சொல்

a. கவிதை b. துளிப்பா c. நாவல்

d. கலிப்பா e. விடை தெரியவில்லை

56. "உழவு உலகிற்கு அச்சாணி" என்று கூறியவர்

a. கம்பர் b. வள்ளுவர் c. கபிலர்

d. ஔவையார் e. விடை தெரியவில்லை

57. வல்லினம் மிகா இடங்கள் குறித்து தவறானதை கண்டறிக.

a. அது, இது எனும் சுட்டுப் பெயர்களின் பின்

b. ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்

c. எழுவாய் தொடரில்

d. வினைத் தொகையில்

e. விடை தெரியவில்லை

58. "ஓரசைச்சீர்" சரியானதை பொருத்துக:

| அசை | வாய்பாடு |
|---|---|
| A. நேர் | 1. காசு |
| B. நிரை | 2. பிறப்பு |
| C. நேர்பு | 3. நாள் |
| D. நிரைபு | 4. மலர் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 1 | 2 | 3 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

59. "ஊற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று புறநானூற்றில் பாடியது யார்?

a. ஔவையார் b. கபிலர்

c. கண்ணகனார் d. ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியன்

e. விடை தெரியவில்லை

60. வடமொழியில் எழுதப்பட்ட – ”பில்கணீயம்” என்னும் காவியத்தைத் தழுவி தமிழில் பாரதிதாசனால் எழுதப்பட்ட நூல்?

a. சேரதாண்டவம் b. பாண்டியன் பரிசு c. புரட்சிக்கவி
d. பிசிராந்தையார் நாடக நூல் e. விடை தெரியவில்லை

61. அயோத்திதாசப் பண்டிதர் பதிப்பித்த நூல்களில் சரியானதை தேர்வுசெய்.

a. போகர் எழு நூறு b. அகத்தியர் இருநூறு
c. சிமிட்டு இரத்திரனச் சருக்கம் d. புத்தரது ஆதிவேதம்
e. விடை தெரியவில்லை

62. “மருக்கொழுந்து நட்டான்” ஆகுபெயர் காண்க.

a. சினையாகுபெயர் b. தொழிலாகுபெயர் c. கருவியாகுபெயர்
d. இடவாகு பெயர் e. விடை தெரியவில்லை

63. உலக மொழிகலுக்கெல்லாம் தாய்மொழி தமிழாகத்தான் இருத்தல் வேண்டும் என்ற மொழியியல் அறிஞர்

a. கால்டுவெல் b. நோம்சாம்சுகி c. கபில் சுவலபில்
d. மாக்சு முல்லர் e. விடை தெரியவில்லை

64. “நாடகச்சாலையொத்த நற்கலாசாலையொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து” யார் கூற்று?

a. பம்மல் சம்பந்தனார் b. சங்கரதாசு சுவாமிகள் c. கவிமணி
d. பரிதிமாற் கலைஞர் e. விடை தெரியவில்லை

65. ”ஓர் இலட்சிய சமூகம் - சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது” என்றவர்

a. பெரியார் b. அண்ணல் அம்பேத்கர் c. காந்தியடிகள்
d. திரு.வி.கா. e. விடை தெரியவில்லை

66. தமிழின் முதல் பயண இலக்கிய நூலான ”காசி யாத்திரை” யை இயற்றியவர் யார்?

a. ஏனுகுல வீராசாமி ஐயர் b. சி. சுப்ரமணியன் c. கே. செட்டியார்
d. மணியன் e. விடை தெரியவில்லை

67. ”பழங்காலத்தில் விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை“ என கூறியவர்

a. கெல்லட் b. எமினோ c. மாக்சு முல்லர்
d. கமில்சுவலமில் e. விடை தெரியவில்லை

68. ”ஆர்தரின் இறுதி” எனும் நூலினை இயற்றியவர்

a. வில்லியம் மில்லர் b. வில்லியம் டேவிட் c. டென்னிசன்
d. ஆர்தர்பெர்ஸி e. விடை தெரியவில்லை

69. அம்பேத்கர் குறித்த தவறான கூற்றுகளைக் கண்டறிக

1. சமூகத்தின் மற்றத்திற்குச் சிந்தனை விதைகளை தூவுகின்ற புரட்சியாளர்களாலே இந்த வையகம் வாழ்கிறது என்றார்.
2. ஓர் இலட்சிய சமூகம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை கொண்டது என்றார்.
3. செல்வமும் கல்வியும் இல்லாத உழைப்பு களர்நிலம், உழைப்பும் கல்வியும் அற்ற செல்வம் மிருகத்தனம்.
4. இந்தியாவின் தேசிய பங்கு வீதம் “எனும் நூலினை எழுதினார்.

a. 1, 2, 3 தவறு b. 2, 3 தவறு c. 3 தவறு
d. அனைத்தும் தவறு e. விடை தெரியவில்லை

70. பின்வரும் கூற்றினைக் கொண்டு நபரைக் கண்டறிக
1. பாவேந்தர் பாரதிதாசனாரின் தலைமாணக்கராக விளங்கினார்.
2. திருவாரூர் மாவட்டத்து பழையனூரில் பிறந்தவர்.
3. தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் நினைவுப் பரிசினைப் பெற்ற முதற்பாவலர்
a. வாணிதாசன் b. முடியரசன் c. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
d. இராச கோபாலன் e. விடை தெரியவில்லை

71. மன்னர் விஜயரங்க சொக்க நாத நாயக்கர் ஆட்சியிலும் அவர் மனைவி இராணி மீனாட்சி ஆட்சியிலும் கணக்கராகப் பணியாற்றியவர் யார்?
a. தாயுமானவர் b. ந. பிச்சமூர்த்தி c. கேடிலியப்பபிள்ளை
d. மேற்கண்ட யாருமில்லை e. விடை தெரியவில்லை

72. "தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" - இவ்வடிகளை இயற்றிய ஆசிரியர்?
a. பாரதியார் b. பாரதிதாசன் c. கவிமணி
d. முடியரசன் e. விடை தெரியவில்லை

73. "சரசாவின் பொம்மை" எனும் சிறுகதையின் ஆசிரியர்?
a. தருமு சிவராமு b. பசுவய்யா c. சி.சு. செல்லப்பா
d. சி. மணி e. விடை தெரியவில்லை

74. இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவராக பதவி ஏற்றிருக்கும் தமிழர்?
a. மயில்சாமி அண்ணாதுரை b. சிவன் c. வளர்மதி
d. அப்துல் கலாம் e. விடை தெரியவில்லை

75. இந்திர விழாவானது எத்தனை நாட்கள் கொண்டாடப்படும்?
a. 29 நாட்கள் b. 27 நாட்கள் c. 30 நாட்கள்
d. 28 நாட்கள் e. விடை தெரியவில்லை

76. பொருத்துக.
A. மனத்துக் கண் மாசிலன் ஆதல் 1. 6 ம் வேற்றுமை விளி
B. வேலைக்கு கூலி 2. 2 ம் வேற்றுமை விளி
C. மாசை ஏற்றி 3. 4 ம் வேற்றுமை விளி
D. மனமது செம்மையானால் 4. 7 ம் வேற்றுமை விளி

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a | 1 | 2 | 3 | 4 |
| b | 3 | 4 | 2 | 1 |
| c | 4 | 3 | 1 | 2 |
| d | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

77. "இன்பங்களை துறந்து துறவு பூண வேண்டும்" என்பதனை காப்பியத்தின் மையக்கருத்தாக கொண்ட காப்பியம் யாது?
a. சீவக சிந்தாமணி b. மணிமேகலை c. சிலப்பதிகாரம்
d. குண்டலகேசி e. விடை தெரியவில்லை

78. 'அகில உலகத் தமிழாய்வு மன்றம்' உருவாகவும் 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்' உருவாகவும் காரணமாக இருந்தவர்?
a. சாலை. இளந்திரையன் b. தனிநாயக அடிகளார்
c. கல்யாண்ஜி d. வண்ணதாசன்
e. விடை தெரியவில்லை

79. தமிழே மிகவும் பண்பட்ட மொழியென்றும் அது தனக்கே உரிய இலக்கியச் செல்வங்களைப் பெற்றுள்ள மொழியென பாராட்டியவர்?

a. கமில்சுவலபில் b. கால்டுவெல் c. மாக்சுமுல்லர்

d. முனைவர் எமினோ e. விடை தெரியவில்லை

80. "தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன்: இன்னிலைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன்: எனக் கூறியவர்?

a. கால்டுவெல் b. வ.உ.சி c. திரு.வி.கல்யாணசுந்தரம்

d. மு.வரதராஜன் e. விடை தெரியவில்லை

81. கம்பர், கம்பராமயணம் பற்றி தவறான கூற்றினைக் காண்.

a. அயோத்தி காண்டம் 2 ஆம் காண்டமாகும். இதில் 13 படலங்கள் உள்ளனு.

b. கடலூர் மாவட்டம் மயிலாடுதுறைக்கு அருகில் தேரழுந்தூரில் பிறந்தார்.

c. ஆயிரம் பாடல்களுக்கு ஒரு பாடல் என தம்மை ஆதரித்த வள்ளல் சடையப்பரை புகழ்ந்து பாடியுள்ளார்.

d. கம்பராமயணமும், திருக்குறளும் தமிழுக்கு கதி என்பர் பெரியோர்.

e. விடை தெரியவில்லை

82. ஒரு வினைமுற்றுச் சொல், எச்சபொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது யாது?

a. வினையெச்சம் b. குறிப்பு வினையெச்சம் c. தெரிநிலை வினையெச்சம்

d. முற்றெச்சம் e. விடை தெரியவில்லை

83. தவறான தொடரினை சுட்டுக.

a. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

b. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

c. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகும்.

d. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

e. விடை தெரியவில்லை

84. சரியான கூற்றினை காண்க. சுரதா

i. பாவேந்தரின் மீது உள்ள பற்றின் காரணமாக சுப்புரத்தினதாசன் என மாற்றிக் கொண்டார்.

ii. இயற்பெயர் இராசகோபாலன் - திருவாரூர் மாவட்டம் பழையனூரில் 1922 ஆம் ஆண்டு பிறந்தார்.

iii. தேன்மழை எனும் கவிதை நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசை பெற்றுள்ளது.

iv. தேன்மழை 16 பகுதிகளாக கவிதை இடம்பெற்றுள்ளது.

a. i, ii சரி b. iii, iv சரி c. i, iii, iv சரி

d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

85. திரு.வி.க அவர்களுக்கு வாய்ந்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என கூறியவர் யார்?

a. மு.வரதராசன் b. அறிஞர் அண்ணா c. தெ.பொ.மீனாட்சி சுந்தரனார்

d. பெரியார் e. விடை தெரியவில்லை

86. தவறான தொடரை காண்க.

a. கவிமணி கன்னியாகுமரி மாவட்டம் தேரூரில் பிறந்தார்.

b. இம்மை, மறுமை பற்றி ரூபாயத் எனும் பெயரில் கவிதை இயற்றினார்.

c. மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

d. ரூபாயத் என்பதன் பொருள் நான்கடிச் செய்யுள்

e. விடை தெரியவில்லை

 044-24339436, 42867555, 9840226187

87. ஒளிப்பறவை எனும் நூலினை இயற்றியவர்?
a. தமிழ் ஒளி b. சிற்பி பால சுப்பிரமணியம் c. கண்ணதாசன்
d. புதுமைபித்தன் e. விடை தெரியவில்லை

88. தவறான கூற்றைக் காண்க.
a. திருநாவுக்கரசர் தென்னார்காடு மாவட்டம், திருவாரூரில் பிறந்தவர்.
b. இவருடைய இயற்பெயர் மருள்நீக்கியார். தந்தை புகழனார்: அன்னை மாதினியார்.
c. சாதி வேற்றுமைகளைக் களைய முற்பட்ட சமுதாயப் பற்றாளராகவும் காணப்பட்டவர்.
d. "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனும் திருவாக்கை தந்தவர்.
e. விடை தெரியவில்லை

89. கீழ்க்காணும் கூற்றின் மூலம் புலவரினை தெரிவு செய்க.
1. இவர் தொழிலாளர் நலனுக்கும் பெண்கள் முன்னேற்றத்துக்கும் அயராது பாடுபட்டவர்.
2. பொதுமை வேட்டல் நூலில் தெய்வநிச்சயம் முதலாக போற்றி ஈறாக நாற்பத்து நான்கு தலைப்புகளில் நானூற்று முப்பது பாக்களால் ஆன நூலினை இயற்றியவர்
a. பெரியார் b. மறைமலையடிகள் c. திரு.வி.க
d. தெ.பொ.மீனாட்சி சுந்தரம் e. விடை தெரியவில்லை

90. திருவிளையாடற் புராணத்தில் வரும் விருத்தப்பாக்கள்
a. மூவாயிரத்து முந்நூற்று அறுபத்து மூன்று
b. மூவாயிரத்து இருநூற்று அறுபத்து மூன்று
c. மூவாயிரத்து மூன்று
d. மூவாயிரத்து எழுபத்து மூன்று
e. விடை தெரியவில்லை

91. "முன்றுரை அரையனார்" – என்றப் பெயரில் அரையனார் என்னும் சொல்லின் பொருள்
a. ஊர் b. அரசன் c. ஆறு
d. நாடு e. விடை தெரியவில்லை

92. "சூரிய ஒளி பெறாத செடியும், பகுத்தறிவு ஒளிபெறாத சமுதாயமும் வளர்ச்சி அடையாது" என உணர்ந்தவர்
a. பாரதி b. சுரதா c. பாரதிதாசன்
d. கவிமணி e. விடை தெரியவில்லை

93. பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. அறுவை வீதி | 1. அந்தணர் வீதி |
| B. கூல வீதி | 2. பொற்கடை வீதி |
| C. பொன் வீதி | 3. ஆடைகள் விற்கும் வீதி |
| D. மறையவர் வீதி | 4. தானியக்கடை வீதி |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 3 | 2 | 1 |
| b. | 3 | 4 | 2 | 1 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 2 | 1 | 3 | 4 |

e. விடை தெரியவில்லை

94. இதன் தமிழாக்கம் "Might is Right"

a. “கடமையே உரிமை“
b. “வல்லான் வகுத்ததே வாய்க்கால்“
c. “வலிமையே சரியான வழி“
d. “ஒற்றுமையே வலிமை“
e. விடை தெரியவில்லை

95. அங்காப்பு என்பதன் பொருள்

a. சலிப்படைதல்
b. வாயைத் திறத்தல்
c. அலட்டிக் கொள்ளுதல்
d. வளைகாப்பு
e. விடை தெரியவில்லை

96. இலக்கணக் குறிப்பு அறிக. பட்டியல் I ஐ II உடன் பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. உரிச்சொற்றொடர் | 1. சூழ்கழல் |
| B. வினைத் தொகை | 2. தழீஇய |
| C. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம் | 3. தடக்கை |
| D. சொல்லிசை அளபெடை | 4. கூவா |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 1 | 3 | 2 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

97. பிரித்தெழுதுக.
“வாயினீர்“

a. வாய் + நீர்
b. வாய்ன் + நீர்
c. வாயின் + நீர்
d. வா + நீர்
e. விடை தெரியவில்லை

98. ‘ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்த்தநல்
தீன்னனுஞ் செல்வமே பழுத்த சேணகர்’’- இதில் ‘தீன்’’ என்பதின் பொருள் என்ன?

a. நகரம்
b. சேனாவீரர்கள்
c. மார்க்கம்
d. கதிரவன்
e. விடை தெரியவில்லை

99. ‘வாடா’’ என அழைத்து வாழ்வித்தால் அம்ம உனைக்
கூடாதென் றார்தடுப்பார் கோமதித்தாய் ஈஸ்வரியே!- என்று பாடியவர்

a. அண்ணாமலையார்
b. அதிவீரராம பாண்டியர்
c. அழகிய சொக்கநாதர்
d. அருணகிரிநாதர்
e. விடை தெரியவில்லை

100. முறையான சொற்றொடரினைக் கண்டறிக:

a. தாய்த்தமிழினை இழந்துவிக்கூடாது விழிகளை இழந்துவிட்டால் கூட என்று எண்ணியர் இரா. இளங்குமரனார்
b. விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் இரா. இளங்குமரனார்
c. இழந்துவிடக்கூடாது தாய்த்தமிழினை விழிகளை இழந்து விட்டால் கூட என்று எண்ணியவர் இளங்குமரனார்.இரா
d. தாய்த்தமிழினை இழக்க நேரிட்டால் கூட விழிகளை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர் இரா. இளங்குமரனார்
e. விடை தெரியவில்லை

101. Which of the following statements is about the Group seen in the Sanchi stone carvings belonging to Chandra Gupta II's period?
a. Kumaaramathyars b. Pancha Mandali c. Mahasandhivigraha
d. Uparika e. Answer not known
இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இருந்த எந்தக் குழுமத்தைப் பற்றிய குறிப்புகள் சாஞ்சிக் கல்வெட்டில் காணப்படுகின்றன?
a. குமாரமாத்யர்கள் b. பஞ்ச மண்டலி c. மகாசந்திவிக்ரஹா
d. உபாரிகா e. விடை தெரியவில்லை

102. Nari Shakti Vandan Adhiniyam was introduced as the ______ Constitutional Amendment Bill
a. 126th b. 127th c. 128th
d. 129th e. Answer not known
நாரி சக்தி வந்தன் ஆதினியம் ______ அரசியலமைப்பு திருத்த மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமு
a. 126வது b. 127வது c. 128வது
d. 129வது e. விடை தெரியவில்லை

103. Choose the incorrect pair
a. Nanda Devi Biosphere Reserve – Uttarakhand
b. Manas National Park – Assam
c. Great Himalayan National Park – Ladakh
d. Bandhavgarh National Park – Madhya Pradesh
e. Answer not known
தவறான இணையைக் காண்க
a. நந்ததேவி உயிர்க்கோள காப்பகம் - உத்தரகாண்ட்
b. மனாஸ் தேசியப்பூங்கா – அஸ்ஸாம்
c. பெரிய இமாலய தேசியப் பூங்கா – லடாக்
d. பந்தவ்கார் தேசியப்பூங்கா – மத்தியபிரதேசம்
e. விடை தெரியவில்லை

104. State Planning Commission established on
a. 25th May 1971 b. 16th May 1971 c. 25th May 1992
d. 16th May 1994 e. Answer not known
மாநில திட்டமிடல் ஆணையம் என்று நிறுவப்பட்டது
a. 25 மே 1971 b. 16 மே 1971 c. 25 மே 1992
d. 16 மே 1994 e. விடை தெரியவில்லை

105. Choose the correct statement about "Illam Thedi Kalvi"
1. Education at doorstep is the single largest post-pandemic educational outreach programme in the country.
2. It bridging the learning gaps among students from classes 1 to 3
3. A three-tier structure has been set up at the State, District & School levels to steer this initiative.
a. 1, 2 b. 2, 3 c. 1, 3 d. 1, 2, 3 e. Answer not known

“இல்லம் தேடி கல்வி” பற்றிய சரியான கூற்றைத் தேர்ந்தெடுக்கவும்
1. நாட்டிலேயே மிகப் பெரிய தொற்றுநோய்க்குப் பிந்தைய கல்வி மேம்பாட்டுத் திட்டமாகும்.
2. இது 1 முதல் 3 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களிடையே கற்றல் இடைவெளிகளைக் குறைக்கிறது
3. இந்த முயற்சியை வழிநடத்த மாநிலம், மாவட்டம் மற்றும் பள்ளி அளவில் மூன்றடுக்கு அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது

a. 1, 2 b. 2, 3 c. 1, 3 d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

106. Choose the correct statements:
i. Tribes of Tamil Nadu are concentrated mainly in the district of Nilgiris.
ii. There are around 38 tribes and sub tribes in Tamil Nadu.

a. i, ii b. i only c. ii only
d. none e. Answer not known

சரியான வாக்கிகங்களை தேர்வு செய்க.
i. தமிழ்நாட்டில் பழங்குடியினர்கள் நீலகிரி மாவட்டத்தில் முதன்மையாக காணப்படுகின்றனர்
ii. தமிழ்நாட்டில் சுமார் 38 பழங்குடியினர் மற்றும் துணை பழங்குடியின குழுக்கள் உள்ளனர்.

a. i, ii b. i மட்டும் c. ii மட்டும்
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

107. Indian Meteorological Department is the Agency of __________
a. Ministry of Environment b. Ministry of Agriculture
c. Ministry of Science & Tech d. Ministry of Earth Science
e. Answer not known

இந்திய வானிலை ஆய்வு துறை எதன் முகவர் அமைப்பாக செயல்படுகிறது?
a. சுற்றுச்சூழல் அமைச்சகம் b. வேளாண் அமைச்சகம்
c. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் d. புவி அறிவியல் அமைச்சகம்
e. விடை தெரியவில்லை

108. Which of the following pairs are correctly matched?
1. National Youth Day - 12th January
2. National Girl Child Day - 24th January
3. National Voters Day - 25th January
4. Pravasi Bharatiya Divas - 9th January

a. 1 and 2 b. 2, 3 and 4 c. 1, 3 and 4
d. 1, 2, 3 and 4 e. Answer not known

கீழே காணப்படுபவைகளில் சரியாக பொருத்தப்பட்டுள்ள ஜோடி எது/எவை?
1. தேசிய இளைஞர் தினம் - 12, ஜனவரி
2. தேசிய பெண் குழந்தைகள் தினம் - 24, ஜனவரி
3. தேசிய வாக்காளர் தினம் - 25, ஜனவரி
4. பிரவாசி பாரதிய திவஸ் - 9, ஜனவரி

a. 1 மற்றும் 2 b. 2, 3 மற்றும் 4 c. 1, 3 மற்றும் 4
d. 1, 2, 3 மற்றும் 4 e. விடை தெரியவில்லை

109. District Planning Committee is provided under
a. 93rd Constitutional Amendment Act
b. 73rd Constitutional Amendment Act
c. 74th Constitutional Amendment Act
d. 94th Constitutional Amendment Act
e. Answer not known
மாவட்ட திட்டக் குழுவை அனுமதிக்கும் சட்டதிருத்தம் எது?
a. 93வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்
b. 73வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்
c. 74வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்
d. 94-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம்
e. விடை தெரியவில்லை

110. Match the following

| | |
|---|---|
| A. Article 53 | 1. State Emergency |
| B. Article 63 | 2. Internal Emergency |
| C. Article 356 | 3. Executive power of President |
| D. Article 76 | 4. Office of the Vice President |
| E. Article 352 | 5. Office of the Attorney General |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 | 5 |
| b. | 3 | 4 | 5 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 5 | 2 |
| d. | 5 | 4 | 3 | 2 | 1 |

e. Answer not known
பொருத்துக:

| | |
|---|---|
| A. சட்டப்பிரிவு 53 | 1. மாநில நெருக்கடிநிலை |
| B. சட்டப்பிரிவு 63 | 2. உள்நாட்டு நெருக்கடிநிலை |
| C. சட்டப்பிரிவு 356 | 3. குடியரசுத் தலைவரின் நிர்வாக அதிகாரங்கள் |
| D. சட்டப்பிரிவு 76 | 4. துணைக்குடியரசுத் தலைவரின் அலுவலகம் |
| E. சட்டப்பிரிவு 352 | 5. இந்திய அரசின் தலைமை வழக்குரைஞர் அலுவலகம் |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 | 5 |
| b. | 3 | 4 | 5 | 2 | 1 |
| c. | 3 | 4 | 1 | 5 | 2 |
| d. | 5 | 4 | 3 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

111. Which one of the following pair is not correctly matched about the sources of Indian constitution?
a. Independent judiciary – USA
b. Single citizenship - UK
c. Concurrent list – Australia
d. Suspension of fundamental rights – Russia
e. Answer not known

இந்திய அரசியலமைப்பின் மூலாதாரங்களாக கருதப்படும், கீழ்கண்ட இணைகளில் சரியாகப் பொருத்தப்படாதது எது?

a. சுதந்திரமான நீதித்துறை – அமெரிக்கா
b. ஒற்றை குடியுரிமை – பிரிட்டன்
c. பொதுப்பட்டியல் - ஆஸ்திரேலியா
d. அடிப்படை உரிமைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் - ரஷ்யா
e. விடை தெரியவில்லை

112. Quit India Movement was launched in response to
a. Cripps Mission
b. Simon Commission Report
c. Cabinet Mission Plan
d. White Paper Report
e. Answer not known

எதன் எதிர்வினையாக வெள்ளையனே வெளியேறு இயக்கம் தொடங்கப்பட்டது?
a. கிரிப்ஸ் திட்டம்
b. சைமன் குழு அறிக்கை
c. காபினட் குழு திட்டம்
d. வெள்ளை தாள் அறிக்கை
e. விடை தெரியவில்லை

113. Who said that "a blow to the sticks on my head will prove to be the nail of the casket of the British Rule"?
a. Mahatma Gandhi
b. Jawaharlal Nehru
c. Lala Lajpat Rai
d. Subhash Chandra Bose
e. Answer not known

என் தலையில் தடியால் தாக்கியது, பிரிட்டிஸ் ஆட்சியின் சவப்பெட்டியில் அறையப்படும் ஆணியைப் போன்றது" என்று கூறியவர் யார்?
a. மகாத்மா காந்தி
b. ஜவஹர்லால் நேரு
c. லாலா லஜபதி ராய்
d. சுபாஸ் சந்திர போஸ்
e. விடை தெரியவில்லை

114. The poetess who lived in the Vijayanagar empire.
a. Hannamma
b. Thirumalamma
c. Gangadevi
d. all the above
e. Answer not known

விஜயநகரப் பேரரசு காலத்தில் வாழ்ந்த பெண்பாற்புலவர்?
a. ஹன்னம்மா
b. திருமலம்மா
c. கங்காதேவி
d. மேற்கூறிய அனைத்தும்
e. விடை தெரியவில்லை

115. Identify the correct statements
I. Rust is chemically known as anhydrous ferric oxide
II. Metals can be alloyed to prevent corrosion
III. Galvanisation is the process of coating Zinc on iron sheets using electric current

a. I and II only
b. I and III only
c. II and III only
d. All the above
e. Answer not known

சரியான கூற்றுகளைக் கண்டறிக:
I. துரு என்பது நீரற்ற ஃபெரிக் ஆக்சைடு என வேதியல் முறையில் அழைக்கப்படும்
II. உலோகங்களைக் கலவையாக்கல் மூலம் அரிமானத்தைத் தடுக்கலாம்.
III. இரும்பின் மீது துத்தநாக மின் முலாம் பூசுவதற்கு நாகமுலாம் பூசுதல் என்று பெயர்.

a. I மற்றும் II மட்டும் b. I மற்றும் III மட்டும் c. II மற்றும் III மட்டும்
d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

116. The compound interest for principal = Rs. 5,000, r = 4%, n = $1\frac{1}{2}$ years, interest compounded half yearly is
a. Rs. 305 b. Rs. 306.04 c. Rs. 306.5
d. Rs.306.4 e. Answer not known
அசல் = 5,000, ஆண்டு வட்டி வீதம் r = 4%, n = $1\frac{1}{2}$ ஆண்டுகள், அரை ஆண்டுக்கொரு முறை வட்டி கணக்கிடப்படுகிறது எனில் கூட்டு வட்டி
a. ரூ. 305 b. ரூ. 306.04 c. ரூ. 306.5
d. ரூ. 306.4 e. விடை தெரியவில்லை

117. There are four mobile phones in a house. At 5 am all the four mobile phones will ring together. Thereafter, the first one rings every 15 minutes, the second on rings every 20 minute, the third one rings every 25 minutes and the fourth on rings every 30 minutes. At what time, will the four mobile phones ring together again?
a. 7 O' Clock b. 1 O' Clock c. 8 O' clock
d. 10 O' Clock e. Answer not known
ஒரு வீட்டில் நான்கு அலைபேசிகள் உள்ளன. காலை 5 மணிக்கு எல்லா அலைபேசிகளும் ஒன்றாக ஒலிக்கும். அதன் பின் முதல் அலைபேசியானது ஒவ்வொரு 15 நிமிடங்களிலும் இரண்டாவது அலைபேசியானது ஒவ்வொரு 20 நிமிடங்களிலும் மூன்றாவது அலைபேசியாது ஒவ்வொரு 25 நிமிடங்களிலும் மற்றும் நான்காவது அலைபேசியானது ஒவ்வொரு 30 நிமிடங்களிலும் ஒலிக்கின்றன எனில் அவை மீண்டும் எப்போது ஒன்றாக ஒலிக்கும்?
a. 7 மணி b. 1 மணி c. 8 மணி
d. 10 மணி e. விடை தெரியவில்லை

118. If $A \rightarrow 1, B \rightarrow 2, C \rightarrow 3 \ldots. Z \rightarrow 26$
H.C.F of (I, X) : L.C.M. of (C, P) = ?
a. 16 : 1 b. 3 : 2 c. 1 : 16 d. 2 : 3 e. Answer not known
$A \rightarrow 1, B \rightarrow 2, C \rightarrow 3 \ldots.. Z \rightarrow 26$ என மதிப்புக் கொண்டால்
மீ.பொ.வ. (I, X) : மீ.சி.ம (C, P) =?
a. 16 : 1 b. 3 : 2 c. 1 : 16 d. 2 : 3 e. விடை தெரியவில்லை

119. In an examination A got 25% marks more than B. B got 10% less than C and C got 25% more than D. If D got 320 marks out of 500. Find the marks obtained by A.
a. 405 b. 450 c. 360 d. 400 e. Answer not known
ஒரு தேர்வில் A என்பவர் Bயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். B என்பவர் Cயை விட 10% குறைவாக பெற்றுள்ளார். C என்பவர் Dயை விட 25% மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். D என்பவர் மொத்த மதிப்பெண்கள் 500 க்கு 320 பெற்றுள்ளார் எனில் A என்பவர் பெற்ற மதிப்பெண்கள் எவ்வளவு?
a. 405 b. 450 c. 360 d. 400 e. விடை தெரியவில்லை

120. In a queue, Arun is 10th from the front while Mukesh is 25th from behind and Maha is just in the middle of the two. If there be 50 persons in the queue, What position does Maha occupy from the front?

a. 17th b. 18th c. 19th d. 20th e. Answer not known

ஒரு வரிசையில் அருண் மேலிருந்து 10-வதாகவும், முகேஷ் கீழிருந்து 25-வதாகவும் உள்ளனர். மகா என்பவர் அவர்கள் இருவருக்கும் நடுவில் அமர்ந்துள்ளார். அந்த வரிசையில் 50 பேர் உள்ளனர் எனில் மகா மேலிருந்து எத்தனையாவதாக இருப்பார்?

a. 17வது b. 18வது c. 19வது d. 120வது e. விடை தெரியவில்லை

121. Match the Space Research Centres with their locations and answer using the codes given below:

| Space Research Centre | Locations |
|---|---|
| A. ISRO Satellite Centre | 1. Ahmedabad |
| B. Vikram Sarabhai Space centre | 2. Sriharikota |
| C. Space Application centre | 3. Thiruvananthapuram |
| D. SHAR centre | 4. Bangalore |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. Answer not known

விண்ணியல் ஆய்வு நிலையங்களையும் அது அமைந்துள்ள இடங்களையும் பின்வரும் குறியீடுகளைக் கொண்டு விடையளி:

| ஆய்வு நிலையங்கள் | இடங்கள் |
|---|---|
| A. இஸ்ரோ துணைக்கோள் நிலையம் | 1. அகமதாபாத் |
| B. விக்ரம் சாராபாய் விண்வெளி நிலையம் | 2. ஸ்ரீஹரிகோட்டா |
| C. விண்வெளி பயன்பாட்டு நிலையம் | 3. திருவனந்தபுரம் |
| D. SHAR நிலையம் | 4. பெங்களூரு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 1 | 3 | 4 |
| b. | 4 | 3 | 1 | 2 |
| c. | 3 | 1 | 2 | 4 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

122. Which of the following movie of Arignar Anna was promoting cooperative farming and abolition of Zamindari System?

a. Nalla Thambi b. Velaikaari

c. Urimai Kural d. Sivaji Kanda Hindu Samrajyam

e. Answer not known

அறிஞர் அண்ணாவின் பின்வரும் எந்தத் திரைப்படம் கூட்டுறவு விவசாயத்தையும் ஜமீன்தாரி முறையை ஒழிப்பதையும் ஊக்குவிக்கிறது?

a. நல்ல தம்பி b. வேலைக்காரி

c. உரிமை குரல் d. சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்

e. விடை தெரியவில்லை

123. Asalambikaiyar was praised as "Contemporary Avvaiyar" by who among the following leader?

a. Thiru.Vi.Ka b. Periyar c. Anna
d. Rajaji e. Answer not known

பின்வரும் தலைவர்களில் யார் அசலாம்பிகையாரை "தற்கால அவ்வையார்" என்று புகழ்ந்தார்?

a. திரு.வி.க b. பெரியார் c. அண்ணா
d. இராஜாஜி e. விடை தெரியவில்லை

124. Who among the following initially supported separate electorate for depressed class?

1. M.C. Raja 2. Rettamalai Srinivasan 3. Periyar

a. 1, 2 b. 1, 3 c. 2, 3 d. 1, 2, 3 e. Answer not known

ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாக தொடக்கத்தில் தனித்தொகுதிகளைக் கோரியவர் யார்?

1. M.C. ராஜா 2. இரட்டைமலை சீனிவாசன் 3. பெரியார்

a. 1, 2 b. 1, 3 c. 2, 3 d. 1, 2, 3 e. விடை தெரியவில்லை

125. Which of the following are correctly matched?

I. RKVY - Rashtriya Krishi Vikas Yojana
II. NADP - National Agriculture Development Programme
III. NHM - National Horticulture Mission
IV. APMC - Agricultural Process Marketing Committee

a. I, II, III b. II, III, IV c. I, III, IV
d. All the above e. Answer not known

பின்வருவனவற்றுள் எவை சரியாக இணைக்கப்பட்டுள்ளன?

I. RKVY - ராஷ்ட்ரிய கிரிஷி விகாஸ் யோஜனா
II. NADP - தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டம்
III. NHM - தேசிய தோட்டக்கலை திட்டம்
IV. APMC - வேளாண் செயல்முறை சந்தைப்படுத்துதல் குழு

a. I, II, III b. II, III, IV c. I, III, IV
d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

126. Match List I with List II and select the correct answer:

| List I | List II |
|---|---|
| A. Vishakhadatta | 1. Nitisastra |
| B. Kamandaka | 2. Niyaya Bhashya |
| C. Asanga | 3. Mudraraksha |
| D. Vatsyayana | 4. Bhumi Sastra |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. Answer not known

பட்டியல் Iஐ பட்டியல் II – உடன் பொருத்துக:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| A. விஸாகதத்தர் | 1. நீதி சாஸ்திரம் |
| B. காமாந்தகர் | 2. நியாய பாஷ்யம் |
| C. அஸங்கர் | 3. முத்ர ராக்ஷஷம் |
| D. வாஸ்த்யாயனர் | 4. பூமி சாஸ்திரம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 4 | 2 | 1 | 3 |
| b. | 3 | 1 | 4 | 2 |
| c. | 3 | 2 | 1 | 4 |
| d. | 1 | 3 | 2 | 4 |

e. விடை தெரியவில்லை

127. How many pairs are correctly matched?
1. Lovlina Borgohain – Boxing
2. Harmanpreet Singh – Hockey
3. Jyothi Yarraji – Hurdles
4. Manu Bhaker – Shooting

a. 1 pair b. 2 pairs c. 3 pairs
d. 4 pairs e. Answer not known

எத்தனை இணைகள் சரியாக பொருத்தப்பட்டுள்ளன?
1. லவ்லினா போர்கோஹெயின் - குத்துச்சண்டை
2. ஹர்மன்பிரீத் சிங் - ஹாக்கி
3. ஜோதி யார்ராஜி – தடைத்தாவல் ஓட்டப்பந்தயம்
4. மனு பக்கர் - துப்பாக்கி சுடுதல்

a. 1 இணை b. 2 இணைகள் c. 3 இணைகள்
d. 4 இணைகள் e. விடை தெரியவில்லை

128. Which act is called as Nirbhaya Act?
a. POCSO Amendment Act – 2019
b. POSH Act – 2013
c. Criminal Law Amendment Act – 2013
d. Maternity Benefit Act – 2017
e. Answer not known

நிர்பயா சட்டம் என அழைக்கப்படும் சட்டம் எது?
a. POCSO சட்டத்திருத்தச் சட்டம் - 2019
b. POSH சட்டம் - 2013
c. குற்றவியல் சட்ட சட்டத்திருத்தச் சட்டம் - 2013
d. பேறுகால சலுகைச் சட்டம் - 2017
e. விடை தெரியவில்லை

129. Which of the followings are themes of Tamilnadu Health System Project (TNHSP)
1. Child Health
2. Health System Performance
3. Population and reproductive health
4. Communicable and non-communicable diseases

a. 1, 2, 4 b. 1, 2, 3 c. 1, 3, 4 d. 2, 3, 4 e. Answer not known

பின்வருவனவற்றுள் எது தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டத்தின் (TNHSP) கருப்பொருள்கள்?
1. குழந்தை சுகாதாரம்
2. சுகாதார அமைப்பு செயல்திறன்
3. மக்கள் தொகை மற்றும் இனப்பெருக்க சுகாதாரம்
4. தொற்று மற்றும் தொற்றுநோயற்ற நோய்கள்
a. 1, 2, 4 b. 1, 2, 3 c. 1, 3, 4 d. 2, 3, 4 e. விடை தெரியவில்லை

130. GDP deflator is used to measure which of the following?
a. Inflation in a country
b. GDP growth rate of a country
c. Unemployment in the country
d. Inequality in an economy
e. Answer not known
பின்வருவனவற்றுள் எந்த ஒன்றைக் கணக்கிட GDP தேய்மானம் பயன்படுத்தப்படுகிறது?
a. ஒரு நாட்டில் பணவீக்கம்
b. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி விகிதம்
c. நாட்டில் வேலையின்மை
d. பொருளாதாரத்தில் சமத்துவமின்மை
e. விடை தெரியவில்லை

131. Match the following

| Rivers | Tributaries |
|---|---|
| A. Palar | 1. Pambar |
| B. Thamirabarani | 2. Siruliar |
| C. Then Ponnaiyar | 3. Kiliyar |
| D. Vaigai | 4. Chittar |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. Answer not known
பொருத்துக

| ஆறுகள் | துணை ஆறுகள் |
|---|---|
| A. பாலாறு | 1. பாம்பன் ஆறு |
| B. தாமிரபரணி | 2. சுருளி ஆறு |
| C. தென்பெண்ணையாறு | 3. கிளியாறு |
| D. வைகை | 4. சிற்றாறு |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 4 | 1 | 2 |
| b. | 4 | 2 | 1 | 3 |
| c. | 2 | 3 | 1 | 4 |
| d. | 3 | 4 | 2 | 1 |

e. விடை தெரியவில்லை

132. 'SATRIYA' dance was famous in
a. Manipur b. Kashmir c. Assam d. Odissha e. Answer not known
'சத்தியா' நடனம் எந்த மாநிலத்தில் புகழ்பெற்றது
a. மணிப்பூர் b. காஷ்மீர் c. அசாம் d. ஒடிசா e. விடை தெரியவில்லை

133. Which of the following Act introduced bi-Cameral Legislature at the central level in India?

a. Indian council Act 1909
b. The Government of India Act 1919
c. The Government of India Act 1935
d. The Indian independence Act 1947
e. Answer not known

